International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 02 April to June 2022 www.irjtsjournal.org

# கனலி இலக்கிய இணையதளச் சிறப்பிதழ்களில் சூழலியல் சிந்தனைகள்

ஆ.பரிமளா,

*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,*

*திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி, திருப்பூர்*

**கனலி கலை இலக்கிய இணைய இதழ்**

கனலி இணைய இதழ் டிசம்பர் 2019ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இவ்விதழ் ஆழமும், அகலமும், உடைய படைப்பாக்கங்களை மாத மாதந்தோறும் வெளியிட்டு வருகின்றது. நவீனத்தை நோக்கிய இளைஞர்;களுக்கான இலக்கிய மேம்பாட்டிற்கும், முயற்சிக்கும் வித்திடும் இக்காலத்திற்கான குறிப்பிடத்தக்க இணையதளங்களில் கனலியும் ஒன்றாகும். கனலி - கலை இலக்கிய இணைய இதழில் வெளியிடப்பட்ட சூழலியல் குறித்தான கருத்துகள் யாவும் மக்களிடையே மிகச் சிறந்த ஆக்கபூர்வமான தாக்கங்களையும், சிந்தனைகளையும், அவற்றைச் செயல்படுத்த வல்ல நெறிமுறைகளையும் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. சூழலியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கனலி இணைய இதழின் சிறப்பான பங்களிப்பினை இக்கட்டுரையின் மூலம் விரிவாக ஆய்ந்துணர முடிகின்றது.

## முக்கிய வார்த்தைகள்:

தமிழ் இணைய இதழ்கள், கனலி கலை இலக்கிய இணைய இதழ், சூழலியல், இயற்கையின் அதிகாரிகள் மனிதர்கள் அல்ல, காலநிலை இதழியல் அறிக்கை, சுற்றுச்சூழல் ஆளுகையின் நெறிமுறைகள், சூழலியல் தத்துவ உளவியல் ஓர் அறிமுகம்.

**முன்னுரை**

உலகம் தனது பரப்பளவில் இருந்து சுருங்;கி இன்று உள்ளங்கைக்குள் அடங்கிவிடும் அளவிற்குத் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இத்தகைய வளர்ச்சிக்கு இன்றியமையாத முதன்மைக் காரணமாகக் கருதப்படுவது கணினித்துறையேயாகும். அறிவியல், தொழில்நுட்பத்தின் வழியில் கணினித்துறையும் தகவல் தொழில் நுட்பத் துறையும் இணைந்து மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ள சிறப்புக் கொடை இணையமாகும். இணையத்தில் இன்று உலக அளவில் பல மொழிகள் இடம்பெற்றிருப்பினும் ஆங்கிலத்தை அடுத்து மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மொழியாகத் தமிழ் அமைந்துள்ளது என்பது பெருமைக்குரியதாகும்.

**தமிழ் இணைய இதழ்கள்**

இன்று கல்வி, வணிகம், வங்கி, வேளாண்மை, பொறியியல், மருத்துவம், அறிவியல் போன்ற பல்வேறு துறைகள் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டு வருகின்றன. இணையத்தில் தமிழ் இணைய இதழ்கள் தொடங்கப்பட்டு, உலகளவில் பெரும் எண்ணிக்கையிலான வாசகர்களைப் பெறுகின்றன. இதன் பயனாகத் தமிழ்மொழியில் கலை, பண்பாட்டு முதலியவற்றிற்கான பகிர்வுத் தேடல்கள், பார்வைகள் முதலியன பன்முக நோக்கில் பரவி வருகின்றன என்பதை உணர இயலுகின்றது. உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்கள் இடத்தால் வேறுபட்டு, பண்;பாடு மற்றும் நாகரீக மாற்றங்களுக்கு உட்பட்டிருப்பினும் தமிழ் மொழியாலும், தமிழ் இணையத்தாலும் இன்று ஒன்றுபட முடிவதற்குப் பெரும்பங்காற்றி வருவன தமிழ் இணைய இதழ்களேயாகும்.

**கனலி கலை இலக்கிய இணைய இதழ்**

கனலி இணைய இதழ் டிசம்பர் 2019ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இவ்விதழ் ஆழமும், அகலமும், உடைய படைப்பாக்கங்களை மாத மாதந்தோறும் வெளியிட்டு வருகின்றது. நவீனத்தை நோக்கிய இளைஞர்;களுக்கான இலக்கிய மேம்பாட்டிற்கும், முயற்சிக்கும் வித்திடும் இக்காலத்திற்கான குறிப்பிடத்தக்க இணையதளங்களில் கனலியும் ஒன்றாகும். இந்த இணையதளத்தின் பெரும் தலைப்புகளாக, இலக்கியப் படைப்புகள், மொழிபெயர்ப்புகள், சிறார் இலக்கியம், நேர்காணல்கள், சிறப்பிதழ்கள் போன்ற பகுப்புப் பகுதிகள் இடம்பெறுகின்றன.

இலக்கியப் படைப்புகள் எனும் பெரும் பகுதிக்குள் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுங்கதைகள், குறு நாவல்கள், நாவல்கள், தொடர்கள் என நவீன இலக்கியத்தை உள்ளடக்கிய படைப்புகள் இங்கு இடம்பெறுகின்றன.

அவையாவும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கவிதைகளும் உலகளாவிய நவீன கோட்பாடுகளை உள்ளடக்கிய கவிதைகளாக வெளியிடப்படுகின்றன. பல்வேறு மொழிகளிலும் எழுதப்படும் சிறுகதைகளை மொழிமாற்றம் செய்து தமிழ் மக்கள் அறியச் சிறந்த கதைளாக இவ்விதழில் வெளியிடப்படுகின்றன.

மொழிபெயர்ப்பு என்னும் தலைப்பில் சிறுகதைகளோடு, கவிதைகள், கட்டுரைகள், கதைகள் போன்றவையும் சிறந்த படைப்புகளாக வெளியிடப்படுகின்றன.

சிறார் இலக்கியம் என்னும் பகுதியில் பாடல்கள், கதைகள், ஓவியங்கள் போன்றவை குழந்தைகளுக்கான இலக்கிய மேம்பாட்டிற்காக வெளியிடப்படுகின்றன. குறிப்பாக ஜப்பானிய மொழியில் காணலாகும் மிகச்சிறந்த படைப்பாளர்களை அறிந்து கொள்ள ஜப்பானிய சிறப்பிதழ் ஒரு முக்கியமான இணையதளப் பதிவாக இருந்தது. மேலும் நுண்கலைகள் குறித்தான கட்டுரைகளும், படைப்புகளும் அவற்றுள் வெளியிடப்படுகின்றன.

நூல் விமர்சனம், கதை இலக்கியம், பெட்டகம், சிற்றிதழ்கள் பக்கம், கடந்த இதழ்கள், அறிவிப்புகள், காணொளிகள், சமகால இலக்கியங்கள் போன்றவை இங்கு தனித்தனிப் பக்கங்களில் வடிவமைக்கப்பட்டு, படைப்புகளாக அவை வெளியிடப்படுகின்றன. சமகால இலக்கியங்கள் எனும் பகுதிக்குள் பலரது படைப்புகள் அலசி ஆராயப்படுகின்றன.

கனலி ஒரு கலை இலக்கிய இணையதளமாகும். இது மாதாந்திர இணைய இதழாக கலை இலக்கியப் படைப்புகளை வெளியிட்டும், மொழி பெயர்ப்பின் முக்கியத்துவம் கருதி, தொடர்ந்து நல்ல மொழிபெயர்ப்பு படைப்புகளை வெளியிட்டும் முன்னோக்கிய சிந்தனையில் இந்த இணையதளம் செயல்பட்டு வருவது சிறப்பாகும்.

புதிய சிந்தனைகளும், கருத்துக்களும் படைப்பாக்கங்களில் போதிய வல்லமை இருந்தும் கலை இலக்கிய உலகில் அறிமுகமாக இயலாத இளம் படைப்பாளிகளுக்கான களமாகவும் கனலி இருக்கிறது.

**சூழலியல்**

சூழலியல் என்பது உயிரினங்கள் மற்றும் அவை இருக்கும் சூழலுடன் அவை உருவாக்கும் சமூகங்களின் உறவின் அறிவியல் ஆகும்.; உண்மையில் இயற்கைக்கும், சுற்றுச் சூழலுக்கும் மனித சமூகம் இழைக்கும் தீங்கைப் போன்று உயிரினங்களின் வேறு எந்த சமூகமும் எவ்விதத் தீங்கும் விளைவிக்கவில்லை. சமீபத்திய நடைமுறைகளில் மனித நடவடிக்கைகள் மிகவும் அழிவுகரமானவையாகப் பெருகிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**இயற்கையின் அதிகாரிகள் மனிதர்கள் அல்ல**

இன்றைக்கு மனிதகுலம் அதன் வரலாற்றில் மிக நெருக்கடியான ஒரு கட்டத்தில் நிற்கின்றது. புவியில் அனைத்து உயிரினங்களுக்குமான பாதுகாக்கப்பட்ட உயிர்வாழ்க்கையை உறுதிசெய்யும் சமரசமற்ற முடிவைக் காலம் தாழ்த்தாமல் எடுக்க வேண்டிய மிக முக்கியமான தருணத்தை, மனிதகுலம் கடந்து கொண்டிருக்கிறது. மனித செயல்பாடுகளால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றம் என்னும் நிகழ்வு அரசியல், பொருளாதாரம் தொடங்கி கலை, இலக்கியம் வரை அதன் தாக்கம் ஏறக்குறைய உலகின் அனைத்து நிகழ்வுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது என்பது கண்கூடாகக் காணக்கூடிய உண்மை நிலையாகும்.

ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் அங்கமான காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக்குழு 1990 ஆம் ஆண்டு முதல் காலநிலை மதிப்பீட்டு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது. அறிவியல் புலத்தில் இவை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வந்தாலும், 2018 ஆம் ஆண்டு இக்குழுவால் வெளியிடப்பட்ட புவி வெப்பமயமாதல் 1.5 டிகிரி செல்சியஸ் சிறப்பு அறிக்கை தான் அண்மைக் காலத்தில் இப்பிரச்சினை குறித்த உலகின் ஒட்டுமொத்த கவனத்தைத் தீவிரப்படுத்தியது. இப்பிரச்சினையைக் களைய அரசியல் தீர்வை வலியுறுத்தி உலக நாடுகளின் தலைவர்களை, அரசியல்வாதிகளை நிர்பந்தித்து

உலகெங்கும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாகப் பதின்பருவத்தினரும், இளைஞர்களும் தங்கள் எதிர்காலத்துக்காக முன்னெடுத்த கால நிலைப் போராட்டங்கள் இப்பிரச்சினையை அடுத்தகட்ட நிலைக்கு எடுத்துச் சென்றன.

இந்த வேளையில்தான் சூழலியல் தகர்வு, சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவற்றின் நேரடி விளைவுகளுள் ஒன்றான கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளுக்கான ஒரு முன்னோட்டமாகவே கருதப்படுகின்றது. இது மனிதர்கள் எத்தனை பலவீனமானவர்கள் என்பதையும், இயற்கையின் அதிகாரிகள் நாம் இல்லை என்பதையும் மீண்டும் ஒருமுறை அழுத்தமாக உரைக்க வைத்திருக்கிறது என ஆசிரியர் அருண்பிரசாத் அவர்கள் "இன்னும் பிறக்காத தலைமுறைக்காக" என்னும் கட்டுரையில் பதிவு செய்கின்றார். இவ்வகைக் கருத்துக்கள் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருக்கும் நிலையே மக்களிடையே சூழலியல் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வாய்ப்பாக அமையும். மேலும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக மக்கள் ஒன்றுபட்டு நடக்க வேண்டும். அவர்களிடம் நாம் பேசத் தொடங்க வேண்டும். இத்தகைய பேசுதலையே "அடுத்த தலைமுறைக்காகவும், இன்னும் பிறக்காத தலைமுறைக்காகவும்" என்ற கட்டுரை பதிவு செய்துள்ளது.

**காலநிலை இதழியல் அறிக்கை**

ஆசிரியர் சு.அருண் பிரசாத் அவர்கள் காலநிலை இதழியல் அறிக்கை என்னும் தலைப்பில் நாம் செய்ய வேண்டியனவாகப் பின்வரும் கருத்துகளைக் கூறியுள்ளார்.

1. "தமிழ் ஊடகங்கள் சூழலியல் - காலநிலை இதழியல் பிரிவை உடனடியாகத் தொடங்குதல்.. ஊடக பேதமின்றி அனைத்து ஊடகங்களும் ஒன்றிணைந்து சூழலியல் காலநிலை இதழியலை முன்னெடுத்தல்

2. தமிழ் அச்சு, காட்சி, ஒலி மற்றும் இணைய ஊடகங்கள் தினமும் குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்ட பகுதியைக் கண்டிப்பாக சூழலியல் - காலநிலைச் செய்தி வடிவங்களுக்கு ஒதுக்குதல்

3. இதழியல், அறிவியல், சமூகவியல் பயிலும் மாணவர்களுள் ஆர்வமுள்ளவர்களைக் கண்டறிந்து ஊடகங்கள் அவர்களுக்கு சூழலியல் காலநிலை இதழியல் பயிற்சி அளித்தல்.. மாணவப் பத்திரிக்கையாளர் பயிற்சித் திட்டங்களில் இதற்கெனத் தனிப் பிரிவொன்றைத் தொடங்குதல்

4. சங்ககாலம் தொட்டு இன்று வரை தமிழ்மொழியில் பயின்றுவரும் சூழலியல் சார்ந்த சொற்களைக் கொண்டு கலைச்சொல் அகராதி ஒன்றைத் தற்காலப் பயன்பாட்டுக்குத் தகுந்தாற்போல் உருவாக்குதல். தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும்; வாழும் மக்களின் வட்டார வழக்குகளில் வழங்கி வரும் சூழலியல் சார்ந்த கருத்துக்களைத் தொகுத்தல்.

5. தமிழகத்தில் உள்ள சூழலியல் காலநிலை மாற்றம் புவியியல், மானுடவியல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, வேளாண்மை உள்ளிட்ட துறைகளின் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், துறைசார்

வல்லுநர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்தல். இதன் மூலம் சூழலியல் - காலநிலை மாற்றத்தின் பல்வேறு பரிமாணங்களை, அறிவியல் மொழியிலிருந்து எளிமையான மொழியில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க முடியும்

**சுற்றுச்சூழல் ஆளுகையின் நெறிமுறைகள்**

புதிய பணிகளை உருவாக்குதல் என்பது மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வரும் இயற்கை வளம் சார்ந்த வாழ்வாதாரங்களை நீக்குவதாகவோ, சீரழிப்பதாகவோ இருக்கக் கூடாது. புதிதாக உருவாக்கப்படும் பணிவாய்ப்புகள், ஏற்கனவே இருக்கும் வாழ்வாதாரங்களுக்குத் துணையாக அமைதல் வேண்டும்.

தமிழகத்தைச் சேர்ந்த வெளிநாடுவாழ் ஆராய்ச்சியாளர்கள், துறைசார் வல்லுநர்கள், பேராசிரியர்கள், முனைவர் பட்ட மாணவர்கள், முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்கள், சர்வதேச ஊடகங்களில் பணியாற்றும்; செய்தியாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்தல், இதன் மூலம் சூழலியல் காலநிலை மாற்றத்தின் சர்வதேசப் போக்குகளைத் தமிழ்ச்சூழலில் உடனடியாகக் கவனப்படுத்துதல்.

'பங்கேற்பு இதழியல்'– தொழில்முறை செய்தியாளர்கள் அல்லாமல், சூழலியல் காலநிலை மாற்றம் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை, அவர்களின் சமுதாயங்களைக் கொண்டு அவர்களின் மொழியிலேயே இப்பிரச்சினைகளைப் பதிவு செய்தல்.

பொதுமக்களின் அன்றாட வாழ்வில் நீங்கா இடம் பெற்றுவிட்ட சமூக வலைத்தளங்களைச் சூழலியல் காலநிலைச் செய்தி வழங்கலுக்கு முறையாகப் பயன்படுத்துதல், இதன் மூலம் பொதுமக்களிடையே சூழலியல் பிரச்சினை குறித்த புரிதலை ஆழப்படுத்துதல்.

பதிப்பகங்கள் சூழலியல் காலநிலை மாற்றம் சார்ந்து வெளியிடும் நூல்களின் தரத்தை, எண்ணிக்கையை மேம்படுத்துதல், தமிழகம் எங்குமுள்ள இலக்கிய அமைப்புகள் தாங்கள் ஒருங்கிணைக்கும் கூட்டங்களில் சூழலியல் காலநிலை மாற்றத்தைப் பேசுபொருளாக எடுத்தல்

இத்துறை சார்ந்து ஆங்கிலத்தில் உள்ள முதன்மை நூல்கள், கண்டிப்பாகத் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல். அவை பரவலாக வாசிக்கப்பட்டுச் சூழலியல்; காலநிலை மாற்றம் சார்ந்த நம் சொல்லாடலை முன்னகர்த்தும்படி செய்தல்

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் எழுத்தாளர்கள் சூழலியல் காலநிலை மாற்றம் சார்ந்த தங்கள் கவனத்தைத் தீவிரப்படுத்துவதன் மூலம், அரசியல் சொல்லாடலுக்குள் இப்பிரச்சினையைக் கொண்டு வர வழிசெய்தல், அதன்மூலம் தமிழ்ச் சூழலியல் மரபைச் சர்வதேசச் சொல்லாடல்களில் எதிரொலிக்கச் செய்தல்

போன்ற கோட்பாடுகளை உள்ளடக்கியதாகச் சுற்றுச்சூழல் ஆளுகை நெறிமுறைகள் அமைந்துள்ளதை இவ்விதழ்க் கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**சூழலியல் தத்துவ உளவியல் ஓர் அறிமுகம்**

மனிதன் முதற்கொண்டு அனைத்து உயிரினங்களும் புதிதாகப் பிறக்கும் பொழுது, முற்றும் புதுமையான வகையில் மனரீதியாகக் குழப்பம் அடைகின்ற நிலை உருவாகின்றது. உயிரினங்களின் வாழ்விற்கு அவற்றின் உடலசைவுகள் அவசியத் தேவையாக உள்ளன. அதுபோலவே அவற்றின் இனப்பெருக்கத்திற்கு அவைகள் வாழும் சூழலின் உதவியும் தேவைப்படுகின்றது. உயிரினங்கள் தங்களது அடிப்படைத் தேவையான உணவைப் பெற அவற்றின் சூழலில் ஒரு குறிப்பிட்ட வகையான ஒழுங்கமைவு அவசியம். இந்த ஒழுங்கமைவு தான் தற்பொழுது சீரழிந்து வருகின்றது. இவ்வகையான சீர்கேட்டிற்கு மனிதர்கள் மட்டுமே முழுக்காரணமாக இருக்கின்றனர். இச்சீர்;கேட்டினை மனிதர்கள் உளவியல் அடிப்படையில் புரிந்து கொண்டு நடப்பது சமகால கட்டத்தின் மிக அவசியத் தேவையாக உருவெடுத்துள்ளது.

அதற்காக சூழலியலின் அடிப்படை உளவியல் தத்துவத்தைப் புர்pந்து கொள்ள வேண்டியது மனித சமூகத்தின் அடிப்படைத் தேவையாகும். இக்கருத்தாக்கத்தை சூழலியம் - தத்துவ - உளவியல் அடிப்படைகள் பற்றிய அறிமுகம் என்னும் கட்டுரை பேசுகின்றது. இன்றைய உலகம் மிகக் குழப்பமானதொரு பேரிடர் நிலையில் இருப்பதைப் பெரும்பாலும் உணர முடிகின்றது. பல நேரங்களில் நடைமுறை வாழ்க்கை ஒருவகையான வெறுமையை உண்டாக்குகின்றது. உலக வெப்ப நிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சீர்கேடு அபாயங்கள் பற்றிய எண்ணிலடங்கா தகவல்கள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. அனைத்து நிகழ்வுகளுமே இன்றைய காலகட்டத்தில் நடப்பவையே. இந்த நிகழ்வுகளை எத்தன்மையில் எதிர் கொள்கிறோம்? பெரும் மனஉளைச்சலை இந்நிகழ்வுகள் தருகின்றன. இதனால் மனிதர்களின் அவசிய உணர்வான மகிழ்ச்சியை இன்றைய சமூகம் இழந்து கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் ஒரு முடிவான மகிழ்ச்சியை எட்டும் வழியை வகுக்க சூழலியத்தை தத்துவம் மற்றும் உளவியல் பார்வையில் புரிந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. இதனை பணம் என்கிற காகிதத்திற்கும், அதன் மதிப்பிற்கும் உள்ள உறவு போலத்தான் வாழ்க்கை என்கிற காகிதத்திற்கும் அதன் மதிப்பிற்குமுரிய வி~யமான சூழலியமும் இருக்கிறது எனக் கூறி அவற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்துத் தொகுத்துள்ளார் திரு ஆதிரன்.

முதலாவதாக மொத்த சூழலியப் பிரச்சினைப் பகுதிகளையும் ஓர் எளிய புர்pதலுக்காக மேல்நிலை சூழலியம் (Shallow Ecology) மற்றும் ஆழ்நிலை சூழலியம் (Deep Ecology) என இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம் என்று சூழலியல் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

பூமிப்பந்தின் சூழலியல் தொடர்பான மனித அறிவு என்பது மிகக் குறுகலானது. உண்மையில் இயற்கைச் சூழலிய நிகழ்வுகளின் விளைவுகள் குறித்த மனித அறிவை விட அறியாமையே அதிகம் உள்ளது எனலாம். எனவே சூழல் மாசுகேட்டையும், இயற்கை வளம் குறைதலையும் பற்றிய புர்pதலை மேல்நிலை சூழலியமாக எடுத்துக் கொள்ளலாம்.

**அதுபோலவே**

1. இயற்கையை மனித மைய நோக்கிலிருந்து அனைத்து உயிர்களுக்கிடையேயுமான உறவுநிலைக் காட்சியாக உணர வைப்பது

2. பல்லுயிர் அடிப்படையில் அவற்;றிற்கு இடையேயான உள்ளிணக்க அமைப்பைப் புரிந்து கொள்வது

3. உயிர்ச் சங்கிலித் தொடர்நிலையை அதன் முழு அர்த்தத்தோடு புரிந்துகொண்டு அதன் சமநிலையைப் பேணுவது

4. சூழலியச் செயல்பாட்டாளர்களுக்கான அதிகபட்ச மதிப்பளிப்பது மற்றும் அவர்களின் தேவைகளைப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவது.

5. இயற்கை உயிர் உருவாக்கம் மற்றும் அவற்றின் வாழிடங்களுக்கிடையேயான உள்ளிணக்கம் பற்றிய துல்லியமான அறிவைப் பெறுவது.

6. மனிதன் தன்னிலிருந்தும், இயற்கையிலிருந்தும் அந்நியமாதலைத் தவிர்த்துத் தரமான மகிழ்ச்சிகரமான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவது போன்ற சூழலியத்தில் ஆழமான பிரச்சினைகளைப் பற்றிய புரிதலாக 'சூழ்நிலை சூழலியத்தை' எடுத்துக் கொள்ளலாம்.

ஆகவே, முதலாவதாக, சூழ்நிலைச் சூழலியல் என்பது மனிதர்களுக்கும் மற்ற அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கைச் சூழலுக்கும் இடையேயான சமநிலையையும், நல்லிணக்கத்தையும் உருவாக்கும் செயல்பாடு பற்றிய அறிவியல் எனலாம்.

இரண்டாவதாக, சூழலியம் என்பது மனித உளவியல் அடிப்படையில் புரிந்து கொள்ளுதல் தொடர்பானதாகும். மனிதர்கள் இந்த பூமியில், உண்மையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற புரிதலிருந்து தொடங்குகிறது இது.

சூழலியத்தை ஒர் அறிவியல் பிரிவாக உருவாக்குவதும், பிரச்சினைகளின் தன்மை பற்றிய தரவுகளின் அடிப்படையில் அதற்கான தீர்வுகளை உருவாக்குவதும் முதல் தொடக்கமாகவும், ஒட்டுமொத்த நோக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

காலநிலை மாற்றம் மற்றும் கனிமவளம் தொடர்பான பிரச்சினைகள் மூலம் சுற்றுச்சூழல் அபாயங்கள் உருவாகின்றன. மனித சமூகத்தின் எதிர்வினைகள் பற்றிய விழிப்புணர்விற்கான சிறந்த பாடத்திட்டங்களை உளவியல் ரீதியாக உருவாக்குவது இன்றியமையாததாகும். அதோடு இயற்கை பற்றிய கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்வதும், அறிவியல்பூர்வமான விவாதங்களை உருவாக்குவதும் குறிப்பாக உலக

வழக்கில் இருக்கும் சூழலியல் தொடர்பான கருத்தோட்டம் குறித்த விளக்கங்;களை ஆராய்வதும் முக்கியமானதாகும்.

சூழலியத்தின் பிரச்சினைகளை அணுகுவதில் சமூக உளவியல், ஊடக, சமூக மற்றும் தனிமனித நியமங்கள் ஆதிக்கம் பெறும் தன்மை பற்றிய புரிதல் உருவாக்கப்பட வேண்டும். மேலும் தனிமனித நியமங்கள் சூழலியல் அறத்தைக் கொண்டு விளங்கும் தன்மையையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

உளவியலின் முக்கியப் பிரிவுகளாக நடத்தை உளவியல் (Behaviour Psychology) நரம்பியல் உளவியல் (Neuro Psychology), கற்றல் உளவியல் (Educational Psychology) போன்றவை அமைகின்றன. அவற்றைப்பற்றிய குறைந்தபட்சப் புரிதல்களை உருவாக்குவதன் பொருட்டு சமுதாயத்தில் சூழலியல் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். நச்சு மற்றும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை (Toxic and Water Management), தகவல் பரிமாற்ற முறைகள் (Information Processing), உலகப் பொது சுகாதாரம் மற்றும் குழந்தை வளர்ப்புச் சூழல் திட்டங்கள், குழந்தைகள் மற்றும் பெண்களின் மனஅழுத்தம் (Stress) தொடர்பான சிக்கல்களைக் களைதல் போன்றவற்றின் திட்டமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் சூழலியல் குறித்த ஒரு முழுமையான அணுகுமுறைச் சிந்தனையை, தத்துவத்தைப் புரிந்து கொள்ள இயலும்.

**முடிவுரை**

இவ்வாறாக கனலி - கலை இலக்கிய இணைய இதழில் வெளியிடப்பட்ட சூழலியல் குறித்தான கருத்துகள் யாவும் மக்களிடையே மிகச் சிறந்த ஆக்கபூர்வமான தாக்கங்களையும், சிந்தனைகளையும், அவற்றைச் செயல்படுத்த வல்ல நெறிமுறைகளையும் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. சூழலியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கனலி இணைய இதழின் சிறப்பான பங்களிப்பினை இக்கட்டுரையின் மூலம் விரிவாக ஆய்ந்துணர முடிகின்றது.

**பார்வை:**

[1] கனலி - இலக்கிய இணையதளம்

[2] அறிவியல் வளர்ச்சி மற்றும் வன்முறை - ஆயி~h இரா.நடராஜன்

[3] சுற்றுச்சூழலியல் - பொன்.சின்னத்தம்பி முருகேசன்

[4] சுற்றுச்சூழல் கல்வி -.கருணாநிதி,நா

[5] இயற்கையோடு இணைவோம் - ஜான் கென்னடி,சே.ச